செய்தி வெளியீடு எண்: 341 நாள்: 22.05.2018

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலக மாநாட்டுக் கூட்ட அரங்கத்தில் 22.05.2018 அன்று மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை K.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் துறையின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் கோட்ட உதவி இயக்குநர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், கோட்ட உதவி இயக்குநர்கள் மற்றும் கால்நடை மருத்துவ பல்கலைகழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் முன்னோடி திட்டங்களான விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தினை பற்றி விவரமாக திறனாய்வு மேற்கொண்டார். கடந்த ஆண்டு வழங்கப்பட்ட 12000, கறவைப் பசுக்களின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து தேவைப்படும் மருத்துவ உதவிகளை உடனுக்குடன் வழங்க அறிவுறுத்தினார். விலையில்லா வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் கடந்த ஆண்டு 1.5 இலட்சம் பயனாளிகளுக்கு தலா நான்கு ஆடுகள் வீதம் 6 இலட்சம் ஆடுகள் வழங்கப்பட்டதை பற்றி கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆடுகளுக்கு தேவைப்படும் குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசிகளை அந்தந்த காலங்களில் விடுபாடின்றி வழங்கவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மாநில கோழியின அபிவிருத்தித் திட்டத்தின் ˙கீழ் 199 கறிக்கோழிப் பண்ணைகள் மற்றும் 2,861 நாட்டுக்கோழிப் பண்ணைகள் நிறுவுவதற்கான குறியீடு எய்தப்பட்டதை பற்றி கேட்டறிந்தார். மேலும் ஊரக புறக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தில் 25,880 பயனாளிகளுக்கு இலவசமாக கூண்டுடன் வழங்கப்பட்ட 20 கோழி குஞ்சுகள் பற்றி விவரமாக கேட்டறிந்தார். மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 11,170 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் மற்றும் தீவன சோளம் விதைகள் வழங்கப்பட்டதையும், 60,000 ஏக்கரில் விவசாயிகள் மானாவாரியில் தீவன சாகுபடி செய்ய தீவன சோளம் மற்றும் காராமணி விதைகள் வழங்கியதை பற்றி ஆய்வு மேற்கொண்டார். நீர்ம தாவர வளர்ப்பு முறையில் நீடித்த நிலையான பசுந்தீவன உற்பத்தி செய்ய வழங்கப்பட்ட 1,100 அலகுகள் மற்றும் 10,000 பயனாளிகளுக்கு அசோலா வளர்ப்புக்கு வழங்கப்பட்ட உள்ளீடுகளின் தற்போதைய நிலை பற்றி ஆய்வு மேற்கொண்டார்.

கால்நடை மருத்துவ நிலையங்கள் மூலமாக செய்யப்படும் சிகிச்சை பணி, குடற்புழு நீக்க பணி, தடுப்பூசி பணி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் ஆகிய பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணிகள் அனைத்து கால்நடை வளர்ப்போருக்கும் சென்று சேரும் வகையில் துறை நடவடிக்கைகள் செவ்வனே இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார். மேலும் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பலன்கள் பயனாளிகளுக்கு சென்றடையும் வகையில் எவ்வித இடையூறுமின்றி சிறப்பாக செம்மையுடன் முடித்திட அறிவுறுத்தினார்.

இத்துறையில் உள்ள அனைத்து மாவட்ட கால்நடைப் பண்ணைகள், கோழிப்பண்ணைகள் மற்றும் ஆட்டுப்பண்ணைகளின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு செய்ததுடன் பண்ணைகளை சிறந்த முறையில் பராமரிப்பதற்கான அறிவுரைகளை வழங்கினார். துறையில் உள்ள காலிப்பணியிடங்களையும் அதனை நிரப்பிட எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி விவரமாக கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணியில் எவ்வித

சுனக்கமும் இருக்கக்கூடாது எனவும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

நிபா வைரஸ் கிருமி பன்றிகள் மூலமாக மனிதர்களுக்கு பரவுவதாக இருக்கும் நிலையில் பன்றிகளில் நோய் உள்ளதா என்பதை கண்டறிய குழுக்கள் அமைத்து கண்காணிக்க மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்கள். மேலும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வல்லுநர்களின் உதவியுடன் இந்நோய்க்கான கடுங்கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார். பயோ தடுப்பு முறைகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கவும் அறிவுறுத்தினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**